**கவனிக்க**.- *2008.12.19 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1582 - 2008 දෙසැම්බර් 26 වැනි සිකුරාදා - 2008.12.26**

*1582 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1452 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1465 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள்* ***வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.*** *வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏலவிற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும், பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.*

*வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்*** *இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2009, சனவரி 02 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2008, திசெம்பர் 19 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2008 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.*

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத்தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் .

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி – மாத்தறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரர்களின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2009, சனவரி மாதம் 26 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.
2008, நவெம்பர் 18.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| 1. மாத்தளை | உகுவல | உடசியாபத்து வடக்கு பிரிவு பிறப்பு, இறப்பு, மற்றும் மாத்தளை வடக்கு பிரிவு விவாக (கண்டி/பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், மாத்தளை |
| 2. மாத்தளை | தம்புல்ல | வனபனஹு பல்லேசியா பத்ர் பிரிவு பிறப்பு, இறப்பு மற்றும் மாத்தளை தெற்கு பிரிவு விவாக (கண்டி/பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , மாத்தளை |
| 3. மாத்தளை | தம்புல்ல | இனமலுவ பிரிவு பிறப்பு, இறப்பு மற்றும் மாத்தளை தெற்கு பிரிவு விவாக (கண்டி/பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , மாத்தளை |

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| 4. மாத்தளை | ரத்தோட | உடசியா பத்து தெற்கு பிரிவு பிறப்பு இறப்பு மற்றும் மாத்தளை வடக்கு பிரிவு விவாக (கண்டி/ பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , மாத்தளை. |
| 5. மாத்தளை | லக்கல பல்லேகம | லக்கல உடசியா பத்து பிரிவு பிறப்பு இறப்பு மற்றும் மாத்தளை கிழக்கு விவாக (கண்டி/பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , மாத்தளை. |
| 6. மாத்தளை | பல்லேபொல | உதுகொட உடசியா பத்து மேற்கு பிரிவு பிறப்பு இறப்பு மற்றும் மாத்தளை தெற்கு பிரிவு விவாக (கண்டி/பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , மாத்தளை. |

12-268

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர்கள் உரிய விவாக பதிவுசெய்கின்ற பிரிவுகளுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்களுக்கு மட்டும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2009, சனவரி மாதம் 26 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.
2008, நவெம்பர் 18.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | யட்டிநுவர | யட்டிநுவர பிரிவின் தெஹியங்க, முறுதலாவ பகுதி முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கண்டி. |
| கண்டி | டொலுவ | உடபலாத பிரிவின் கழுகமுவ பகுதி, முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , கண்டி. |
| கண்டி | பதஹேவஹெத | பதஹேவஹெத பிரிவின் உடதெனி பகுதி முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , கண்டி. |
| கண்டி | தெல்தோட | பதஹேவஹெத பிரிவின் தெல்தோட பகுதி முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம் மாவட்ட செயலகம் , கண்டி. |
| கண்டி | கங்கவத்தகோறளை, கண்டி | நான்கு குழி (Gravets) கங்கவத்த பிரிவின் தென்னெக்கும்புறா பகுதி முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , கண்டி. |
| கண்டி | கங்க இஹல கோறளை | உடபலாத பிரிவின் உலபனே பகுதி முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , கண்டி. |
| கண்டி | உடபலாத | உடபலாத பிரிவின் கம்பளை நகரம் பகுதி முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , கண்டி. |
| கண்டி | பூஜாபிடிய | ஹரிஸ்பத்து பிரிவின் புலுகோஹொதென்ன பகுதி முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , கண்டி. |

12-269

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி – கேகாலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுகளுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2009, சனவரி மாதம் 26 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.
2008, திசெம்பர் 02.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| காலி | அல்பிடிய | ஆம்பன பிரிவு பிறப்பு, இறப்பு மற்றும் பெந்தர வளல்லாவிட்ட கோறளை பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், காலி. |
| காலி | நியாகம | நியாகம பிரிவு பிறப்பு இறப்பு மற்றும் பெந்தர வளல்லாவிட்ட கோறளை பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , காலி. |
| காலி | ஹபறாதுவ | உணவடுவ பிரிவு பிறப்பு இறப்பு மற்றும் தல்பெபத்துவ பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , காலி. |

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| காலி | பலபிடிய | அகுன்கல்ல பிரிவு பிறப்பு இறப்பு மற்றும் பெந்தர வளல்லாவிட்ட பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , காலி. |
| காலி | நாகொடை | மபலகம அதுமலே பிரிவு பிறப்பு இறப்பு மற்றும் கங்கபொடபத்துவ பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , காலி. |
| காலி | பெந்தோட்டை | பெந்தோட்டை வலல்லவிட்ட கோறளை விவாக (பொது) பதிவாளர் பதவி மற்றும் இந்துறுவ பிரிவு பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி. | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , காலி |
| காலி | கரந்தெனியா | வெல்லபோத பத்துவ பிரிவு விவாக (பொது) பதிவாளர் பதவி மற்றும் கரந்தெனியா கிழக்கு பிரிவு பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி. | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , காலி |
| காலி | அக்மீமன | தல்பே பத்துவ பிரிவு விவாக (பொது) பதிவாளர் பதவி மற்றும் பிலான/மெதறம்பா பிரிவு பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி. | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , காலி |

*12- 620*

---

## இலங்கைப் பொலிஸ் திணைக்களம்

பொலிஸ் கான்ஸ்ரபிள், பொலிஸ் கான்ஸ்ரபிள் சாரதி பதவிகள் (விசேட அதிரடிப்படை)

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் பொலிஸ் கான்ஸ்ரபிள், பொலிஸ் கான்ஸ்ரபிள் சாரதி பதவிகளுக்கு இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் ''பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), ஆட்சேர்ப்பு அலுவலகம், 1 ஆம் மாடி, இல. 375, மாயாமாவத்தை, கொழும்பு - 06 '' என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் வைத்து அனுப்பப்படும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் ''பொலிஸ் கான்ஸ்ரபிள், பொலிஸ் கான்ஸ்ரபிள் சாரதி'' எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2009.03..31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பப்பட வேண்டும். தாமதித்து பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது என்பதுடன் பொலிஸ் திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டாது.

3. **சம்பள அளவுத்திட்டம்.**-*பயிலுநர் பொலிஸ் கான்ஸ்ரபிள் பதவி.- ரூபா 1,71,360 - 7 x 1,740 - 10 x 2,160 - 17 x 2,880 - ரூபா 2,54,100

* பயிலுநர் பொலிஸ் கான்ஸ்ரபிள் சாரதி பதவி.- ரூபா 1,71,360 - 7 x 1,740 - 10 x 2,160 - 17 x 2,880 - ரூபா 2,54,100

மேற்கூறப்பட்ட சம்பள அளவுத்திட்டத்துக்கு மேலதிகமாக கீழ்க்காணும் படிகள் மாதம் தோறும் வழங்கப்படும் :-

(அ) விசேட கடினப்படி:

(1) போர் நடைபெறும் பிரதேசங்களில் கடமை பொருட்டு ரூபா 1,200;
(2) போர் நடைபெறாத பிரதேசங்களில் கடமை பொருட்டு ரூபா 600.

(ஆ) இணைந்த படிகள்:

(1) போர் நடைபெறும் பிரதேசங்களில் கடமை பொருட்டு ரூபா 10,500;
(2) போர் நடைபெறாத பிரதேசங்களில் கடமை பொருட்டு ரூபா 3,500.

அ. இலவச பயண வசதி ;

ஆ. உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளி நாடுகளிலும் வைத்திய சிகிச்சை பொருட்டு) பண உதவிகள் வழங்கப்படும்;

இ. சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும்;

ஈ. விளையாட்டுத் திறனை வளர்ப்பதற்கு உதவிகள் வழங்கப்படும்;

உ. கடமைக்கான பிரயாணச் செலவுகள், துணிகரமான சேவை களுக்காகவும் அத்துடன் திறமையாக கடமைகளை நிறைவு செய்வதற்காகவும் வெகுமதியாகவும் பணம் வழங்கப்படும்.

**4.தேவையான அடிப்படைத் தகைமைகள்.-**

(அ) வயதெல்லை :

* தகுதிகூர் பொலிஸ் கான்ஸ்ரபிள் பதவி :

வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்பமுடிவுத் திகதியில் 18-25 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் சேவை செய்யும் உத்தியோகத்தர்களுக்கும், பாதுகாப்பு உத்தி யோகத்தர்களுக்கும் (SA) விண்ணப்பங்கள் பாரம் கொடுக்கும் கடைசி திகதி அன்று 30 வயதிற்கு உட் பட்டவராக இருத்தல் வேண்டும்

* தகுதிகூர் பொலிஸ் கான்ஸ்ரபிள் சாரதி பதவி :

வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்பமுடிவுத் திகதியில் 19-26 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் சேவை செய்யும் உத்தியோகத்தர்களுக்கும், பாதுகாப்பு உத்தி யோகத்தர்களுக்கும் (SA) விண்ணப்பங்கள் பாரம் கொடுக்கும் கடைசித் திகதி அன்று 30 வயதிற்கு உட் பட்டவராக இருத்தல் வேண்டும்

(ஆ) கல்வித் தகைமைகள்.-

* தகுதிகூர் பொலிஸ் கான்ஸ்ரபிள் பதவி

* க.பொ. த. (சா.தர) பரீட்சையில் கணிதம், தாய்மொழி அடங்கலாக இரு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரு தடவைகளில் சித்தியெய்தியவர்கள் முதல் தடவையில் ஐந்து பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

* பொலிஸ் கான்ஸ்ரபிள் சாரதி பதவி க.பொ.த. (சா.த) பரீட்சையில் கணிதம், தாய்மொழி அடங்கலாக இரு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரு தடவைகளில் சித்தியெய்தியவர்கள் முதல் தடவையில் ஐந்து பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

* **குறிப்பு 1.-** இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையை கணக் கில் எடுக்கும் போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க.பொ. த. (சா.தர) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 2.-** க.பொ.த.(சா.தர) பரீட்சையின் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்ப பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல் முறைப்பரீட்சையில் சித்தியடைந்திருந்த போதும் அப்பாடத்தில் சித்தியடையாததாக கருதப்படும்.

**குறிப்பு 3.-** விருப்பத்துக்குரிய தமிழ், ஆங்கிலம், சிங்கள பாடங்கள் க. பொ. த. (சா. தர) பாடத்திட்டத்துக்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்திபெறுதல் க.பொ.த. (சா.தர) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாக கருதப்படமாட்டாது.

(இ) பௌதிக தகைமைகள் :

* தகுதிகூர் பொலிஸ் கான்ஸ்ரபிள் சாரதி பதவி :

- உயரம் : 5 அடி 4 அங். (ஆகக் குறைந்தது)
- மார்பு : 30 அங். ஆகக் குறைந்தது (மூச்சு விட்ட நிலையில்)

* தகுதிகூர் பொலிஸ் கான்ஸ்ரபிள் பதவி :

- உயரம் : 5 அடி 3 அங். (ஆகக் குறைந்தது)
- மார்பு : 30 அங். ஆகக் குறைந்தது (மூச்சு விட்ட நிலையில்)

**குறிப்பு 1.-** சிறந்த விளையாட்டுத்திறமையுடைய தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமைகாட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் உயரமும், மார்பளவும் குறைவாக இருப்பினும் அவர் பிற தேவைகளை பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் தற்றுணிபின் படி ஆட்சேர்க்கும் பொருட்டான தகைமையை அவர் பெறுவார்.

(ஈ) தொழில் தகைமைகள் :

(1) இலகு வாகனங்களை அல்லது கனரக வாகனங்களை ஓட்டும் திறமை இருப்பதற்கான சான்றிதழ் இருத்தல்.

(2) மேற்குறிப்பிட்ட சான்றிதழைப் பெற்ற பின் ஆகக் குறைந்தது ஒரு வருடத்திற்கு மோட்டார் வாகனம் செலுத்திய அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

- வாகனத்தை திறமையுடன் செலுத்துவதற்கு தேவைப்படும். உடல் அவயங்களின் இயக்கத்திற்கு தடையாக இருக்கும் ஏதாவதொரு அங்கவீன அல்லது பிற உடல் குறைபாடுகளை உடைய வேட்பாளர் சேவைக்கு பொருத்தமானவர் எனும் வைத்தியசாலை சான்றிதழ் பெற்றிருப்பினும் தகைமை நீக்கப்படுவர்.

- அடிப்படைத் தகைமைகளை கொண்ட விண்ணப்பதாரர் வாகனம் செலுத்துவது, பராமரிப்பு தொடர்பில் பரீட்சிக்கப்படுவர். அது போலவே வீதிகள் போக்குவரத்து சைகைகள் தொடர்பாக வேட்பாளர்கள் பெற்றுள்ள அறிவு ஒவ்வொரு வேட்பாளரும் வாகனம் செலுத்துவதற்கு திறமை பெற்றுள்ள வாகனங்களும் இயந்திர தொழில்நுட்பம் தொடர்பான அடிப்படை அறிவு ஆகியனவும் பரீட்சிக் கப்படும்.

**பார்வை தொடர்பான தேவை.-** ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 க்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/ 6 ஆகவும் மற்ற கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பின் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல்

வேண்டும். விண்ணப்பதாரர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் தகைமை அற்றவராவர்.

ஊ. பிற தகைமைகள் .-விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்துப் பெற்றவர்கள், விவாகமானவர்களாகக் கருதப்படுவர்.) ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கு இது ஏற்புடையதாகாது.

**5. ஆட்சேர்ப்பு முறை.-** தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் ஆரம்ப தகைமைகள் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். இதில் சித்தியடைபவர்கள் மாத்திரம் கீழ்வரும் உடற்பயிற்சிகளில் பங்கு பற்றலாம் அதாவது மனோவலிமை பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.

- பயிலுநர் பொலிஸ் கான்ஸ்ரபிள் பதவி

(1) 1000 மீற்றர் - 3 நிமிடங்கள் 44 விநாடிகள்

- பயிலுநர் பொலிஸ் கான்ஸ்ரபிள் சாரதி பதவி

(1) 1000 மீற்றர் - 3 நிமிடங்கள் 44 விநாடிகள்

- தகுதிகாண் பரீட்சையில் சித்திபெறும் விண்ணப்பதாரர்கள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர் இறுதி நேர்முகப் பரீட்சையில் 40 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகள் பெறும் விண்ணப்பதாரர்கள் மாத்திரம் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். தகுதிகாண் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரர்கள் சாரதி தொழில்சார் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

எழுத்துப் பரீட்சை.- (பொலிஸ் கான்ஸ்ரபிள்)

* எழுத்துப் பரீட்சை இரு வினாத்தாள்களை அடக்கி உள்ளது;
* 45 நிமிடங்களில் 500 சொற்களுக்கு குறையாமல் ஒரு விடயம் தொடர்பாக எழுதுதல்;
* பொது அறிவும் பொது நுட்பமும் - 01 மணித்தியாலம்.

**6. தொழில்சார் பரீட்சை (பொலிஸ் கான்ஸ்ரபிள் சாரதி பதவி).-** 6.1 இலங்கை பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரின் பணிப்புரையின் கீழ் பொலிஸ் சாரதி பாடசாலையின் உதவி பணிப்பாளரினால் தொழில்சார் பரீட்சை நடாத்தப்படும்.

6.2 தொழில்சார் பரீட்சைக்கு 100 புள்ளிகள் ஒதுக்கப்பட்டுள்ளது தொழில்சார் பரீட்சை பின்வருமாறு நடாத்தப்படும் :-

(அ) வாகனம் செலுத்தும் தகுதி - 50 புள்ளிகள் ;
(ஆ) வீதிச்சட்ட அறிவுரை - 25 புள்ளிகள் ;
(இ) வாகனப் பராமரிப்பு, சிறிய திருத்த வேலைகள் தொடர்பான அறிவு - 25 புள்ளிகள்.

6.3 தொழில்சார் பரீட்சை.- வாகனம் செலுத்தும் தகுதிப்பரீட்சைக்கு ஒதுக்கப்பட்டுள்ள உச்ச எல்லையாகிய 50 புள்ளிகளில் ஆகக் குறைந்தது. 25 புள்ளிகளும் வீதிச்சட்ட அறிவுரை புத்தகம் தொடர்பாக ஒதுக்கப்பட்டுள்ள உச்ச எல்லையாகிய 25 புள்ளிகளில் ஆகக்குறைந்தது 12.5 புள்ளிகளும் வாகனப் பராமரிப்பும் சிறிய திருத்த வேலைகள் தொடர்பான அறிவுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள உச்ச எல்லையாகிய 25 புள்ளிகளில் ஆகக்குறைந்தது 12.5 புள்ளிகள் பெற்று முழுப்புள்ளிகளில் ஆகக்குறைந்தது 50 புள்ளிகளாவது பெறும் விண்ணப்பதாரிகள் தொழில்சார் பரீட்சையில் சித்தியடைந்தவர்களாகக் கருதப்படுவர்.

**7. வைத்திய பரீட்சை :**

* ஆகக்கூடிய புள்ளிகளையும் ஏனைய திறமைகளையும் உடைய விண்ணப்பதாரிகள் தமது நியமனத்திற்கு முன் வைத்திய பரீட்சைக்கு தோற்ற வேண்டும். பரீட்சையில் சித்தி பெறாதோர் நிராகரிக்கப்படுவர்.

**8. பின்னணி விசாரணை.-** (அ) விண்ணப்பதாரியின் நன் நடத்தை தொடர்பாக, அவர் தொடர்பாகவும் கிட்டிய உறவினர்களதும், நண்பர்களினதும் நடத்தை தொடர்பாகவும் விசாரணை மேற்கொள்ளப் படும். துர் நடத்தையுள்ள விண்ணப்பதாரிகள் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரி பொய் தகவல் கொடுப்பது அவரை ஆட் சேர்ப்பதற்கு தகைமை அற்றதாகும். ஆட்சேர்ப்பின் பின் பொய்யான தகவல் கொடுத்துள்ள விடயம் வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவர்.

**9. அரச மொழித் தேர்ச்சிக் கொள்கையை அமுல்படுத்தல்.-** • பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 2007.04.28 ஆந் திகதிய 07/2007 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்று நிருபத்தின் பிரகாரம் அரச சேவைக்கு/ மாகாண அரச சேவைக்கு சேர்க்கப்பட்டவர்கள் தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச கரும மொழிகளிலும் 2007.07.01 ஆந் திகதியிலிருந்து 5 வருடத்திற்குள் தேர்ச்சி பெறல் வேண்டும்.

• 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்கு கீழே சேர்க்கப்படும் அலுவலர்கள், அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் மொழிப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

• நியமன தேதியில் இருந்து 5 வருடத்திற்குள் இரண்டாம் அரச கருமமொழியில் சித்தியடையாதவர்களாயின் சம்பள ஏற்றம் தேர்ச்சியடையும் வரை நிறுத்தி வைக்கப்படும்.

**10. பதவிக்கமர்த்தல் நியதிகள்.-** இப்பதவி நிரந்தரமானது ஓய்வூதியத்திற்குட்பட்டது. விதவைகள்/தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு சந்தாப்பணம் கொடுத்தல் வேண்டும்.

**11. சேவை நிபந்தனைகள்.-** (அ) நியமனம் 3 ஆண்டு காலத்துக்கு தகுதிகாண் அடிப்படையில் இருக்கும்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை வினைவுறும் முகமாக ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் ஆக்கப்படக் கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபனக் கோவையின் 1 ஆம், 2 ஆம் தொகுதிகளில் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகளுக்கும் நிதி ஒழுங்கு விதிகள், திணைக்களக் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்பட்டவராவர்.

(ஈ) I. பதவியில் உறுதிப்படுத்துவதற்கு முன்பதாக விண்ணப்பதாரிகள் குறிப்பிடப்பட்டுள்ள திணைக்களப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். குறிப்பிடப்பட்டுள்ள திணைக்களப் பரீட்சையில் சித்தியடையாமலும் பொலிஸ் கடைமைகளுக்கு

தகுதியில்லையெனவும் காணப்படும். விண்ணப்பதாரிகள் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு இடமுண்டு.

II. நியமனம் உறுதிப்படுத்துவதற்கு முன் பொலிஸ் கொஸ்தாபல் சாரதி மேற் போந்த பந்தி (அ) (1) இற்கு மேலதிகமாக பொலிஸ் கல்லூரியினால் நடாத்தப்படும் பாரவண்டிகள் செலுத்துதல் தொடர்பான பரீட்சைகளிலும் சித்தியெய்துதல் வேண்டும்.

(உ) பொலிஸ்மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் தமது பதவியில் உறுதிப்படுத்தும் வரை திருமணம் செய்ய இயலாது. எனினும் 1973.02.28 ஆந் திகதிய 41 ஆம் இலக்க பொலிஸ் வர்த்தமானி பகுதி II பிரகாரமும் 2006.10.19 ஆந் திகதியும் 2007.08.09 (திருத்தப்பெற்றது) ஆந் திகதியுமுடைய 1952/2006 ஆம் இலக்க பொலிஸ்மா அதிபரின் சுற்று நிருபத்தின் பிரகாரமும் விசேட காரணங்களை காட்டி பொலிஸ்மா அதிபரின் அங்கீகாரத்துடன் திருமணம் செய்ய முடியும்.

(ஊ) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருட கால தகுதிகாண் நிலையில் பொலிஸ் திணைக்களத்திலேயே பணியாற்ற வேண்டியதுடன் தகுதிகாண் சேவைக்காலம் முடிவடைவதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக்காகவும், சீருடை முதலியவற்றிற்காகவும் செய்த செலவினங்கள் பொருட்டு விதிக்கப்படும் பணத் தொகையை செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்த மொன்றில் கையொப்பமிடல் வேண்டும். அப்பணத் தொகை இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் கணிக் கப்பட்டு தீர்மானிக்கப்படும். பதவி விலகல்களை அங்கீகரிப்பது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் 1 ஆம் தொகுதி யின் 5 ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாய் இருத்தல் வேண்டும்.

(எ) பயிலுநர் பொலிஸ் கான்ஸ்ரபிள், பயிலுநர் பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதி (விசேட அதிரடிப்படை), பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் பொலிஸ் மா அதிபரின் 1693/ 2003 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி பொலிஸ் நன்னடத்தைக் கோவைக்கு அமைந்தொழுகுவதாக உறுதி/சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஏ) பயிலுநர் பொலிஸ் கான்ஸ்ரபிள், பயிலுநர் பொலிஸ் கான்ஸ்ரபிள் சாரதி (விசேட அதிரடிப்படை) பொலிஸ் பயிற்சி கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் பொலிஸ் மா அதிபரின் 1804/ 2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச சேவைக்கு அமைந்தொழுகுவதாக உறுதி/சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஒ) பயிலுநர் பொலிஸ் கான்ஸ்ரபிள், பயிலுநர் பொலிஸ் கான்ஸ்ர பிள் சாரதி (விசேட அதிரடிப்படை) பொலிஸ் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையவராவர்.

12. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) வில் வெளியிடப்பட்டுள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளுக்கு கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய 15/ 90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின் படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

13. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் ஆவணங்களின் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும். (மூல ஆவணங்களை சமர்ப்பித்தல் ஆகாது):-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) அண்மையில் பெறப்பட்ட குணச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது) ;

(இ) கல்வித் தகைமைகளை சான்றுபடுத்தும் சான்றிதழ்கள் ;

(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது பாடத்துக்கு புறம்பாக பெறப்பட்ட சான்றிதழ்கள் ;

(உ) சேவை அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள் (இருப்பின்);

(ஊ) தேசிய அடையாள அட்டையின் பிரதி.

14. (அ) ஏலவே அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்புதல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதழ்களும் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11"x 8" அளவுத் தாளிலான விண்ணப் பத்தை தமது சொந்த கையெழுத்தில் பூரணப்படுத்தி கேட்கப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்ப வேண்டும். எக்காரணம் கொண்டும் திணைக் களத்தின் எந்த உத்தியோகத்தர்களிடமும் விண்ணப்பங்களை நேரடியாக கையளித்தலாகாது.

15. இவ்வறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பாக விண்ணப்பக்காரர்களுக்கு அறிவிக்கப்பட மாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவு களோ வழங்கப்பட மாட்டாது.

பொலிஸ் மா அதிபர்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பொலிஸ் திணைக்களம்**

பொலிஸ் கான்ஸ்ரபிள், பொலிஸ் கான்ஸ்ரபிள் சாரதி பதவிகள்
(விசேட அதிரடிப்படை)

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழ்களில் உள்ளபடியும் இருத்தல் வேண்டும்) :-----.

(ஆ) முதல் எழுத்துக்களுடன் பெயர் :-----.

(இ) விண்ணப்பதாரியின் பதவி :-----.

2. தேசிய அடையாள அட்டை இல. :-----.
(பிரதியை இணைக்கவும்)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.

பிறந்த இடத்துக்குரிய பொலிஸ் நிலையம் (மாகாணம்) :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.
(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
(இ) நிரந்தர முகவரி :-----.

(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையமும், தேர்தல் மாவட்டமும் :-----.

6. (அ) தேசிய இனம் :-----.

(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரசையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழ் பிரதியை இணைக்கவும்) :-----

(இ) வம்சாவளி மூலம் இலங்கைப் பிரசையானால் பின்வருபவர்கள் பிறந்த இடத்தைக் குறிப்பிடவும் :-

(1) விண்ணப்பதாரர் :-----.

(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.

(3) விண்ணப்பதாரரின் தந்தை வழிப் பாட்டன் :-----.

(4) விண்ணப்பதாரரின் தந்தை வழி முப்பாட்டன் :-----.

7. வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு விண்ணப்பதாரரின் வயது :-
(விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)
வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

8. உயரம் : அடி :-----, அங்குலம் :-----.
மார்பு : ------ அங்குலம்

9. கல்வித் தகைமைகள் :- (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. வேறு ஏதேனும் விசேட தகுதிகள் /தகைமைகள் உண்டா ? :-----.

11. திருமணம் ஆனவரா? திருமணம் ஆகாதவரா ? :-----.

12. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.

(ஆ) நீங்கள் இலங்கை படைதாங்கு சேவையின் அங்கத்தவரா ? :-----.

13. வேறு ஏதேனும் விசேட திறமைகள் உண்டா ? :-----.

14. உங்களைப் பற்றிய தகவல்களைக் கொடுக்கக்கூடிய உறவினர் அல்லாத இரு நபர்களின் பெயர்களையும் முகவரிகளையும் தருக. :-----.

(அ) :-----.

(ஆ) :-----.

15. (அ) இலங்கைப் பொலிஸ் சேவையின் ஏதாவது பதவி ஒன்றுக்கு நீங்கள் இதற்கு முன்பு விண்ணப்பித்ததுண்டா? (அவ்வாறாயின்) இது தொடர்பான விபரங்களைத் தருக. :-----.

(ஆ) இதற்கு முன்பு நீங்கள் இலங்கைப் பொலிஸில் அல்லது இலங்கை உப சேவைப் பொலிஸில் சேவை செய்துள்ளீரா? அவ்வாறாயின் அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைத் தருக? :-----.

16. (அ) தற்போதைய படைதாங்கு சேவையில் இருந்திருந்தால் அப்படைத்தாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும் :----.

(ஆ) படைத்தாங்கு சேவையில் இருந்திருந்தால் அதிலிருந்து விலகிய போது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும்.

17. (அ) படைதாங்கு சேவையின் தொண்டர் அணியில் இருந்துள்ளீரா? அல்லது இருக்கின்றீரா? அவ்வாறு இருந்திருந்தால் படைதாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் எப்போதாவது அரசாங்கத்தின் கீழ் சேவையாற்றி யுள்ளீர்களா? அவ்வாறாயின் நீங்கள் சேவையாற்றிய காலப்பகுதி திணைக்களம், பதவி ஆகியவற்றின் விபரங்களைத் தருக.:-----.

18. நீங்கள் ஏதாவது ஒரு குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்திற்கு அழைக்கப் பட்டுள்ளீரா அல்லது தண்டனை கொடுக்கப்பட் டுள்ளீரா?அவ்வாறாயின் விபரங்களைத் தருக.:-----.

19. உங்கள் உறவினர் எவரேனும் தவறு சம்பந்தப்பட்டு அல்லது அது தொடர்பான அழைப்பாணை கொடுக்கப்பட்டுள்ளனரா அல்லது குற்றம் சுமத்தப்பட்டுள்ளனரா அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ள னரா? அவ்வாறாயின் விபரம் தருக. :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யானவையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் திணைக்கள சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பினும் எந்தச் சந்தர்ப்பத்திலும் உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

---

12-750

## இலங்கைப் பொலிஸ் திணைக்களம்

### பொலிஸ் கான்ஸ்ரபிள், பெண் பொலிஸ் கான்ஸ்ரபிள், பொலிஸ் கான்ஸ்ரபிள் சாரதி பதவிகள்

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் பொலிஸ் கான்ஸ்ரபிள், பெண் பொலிஸ் கான்ஸ்ரபிள், பொலிஸ் கான்ஸ்ரபிள் சாரதி பதவிகளுக்கு இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), ஆட்சேர்ப்பு அலுவலகம், 1 ஆம் மாடி, இல. 375, மாயாமாவத்தை, கொழும்பு - 06 " என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் வைத்து அனுப்பப்படும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "பொலிஸ் கான்ஸ்ரபிள், பெண் பொலிஸ் கான்ஸ்ரபிள், பொலிஸ் கான்ஸ்ரபிள் சாரதி" எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2009.03.31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பப்பட வேண்டும். தாமதித்து பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது என்பதுடன் பொலிஸ் திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டாது.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- பயிலுநர் பொலிஸ் கான்ஸ்ரபிள் பதவி.- ரூபா 1,71,360 - 7 x 1,740 - 10 x 2,160 - 17 x 2,880 - ரூபா 2,54,100

* *பயிலுநர் பெண் பொலிஸ் கான்ஸ்ரபிள் பதவி.*- ரூபா 1,71,360 - 7 x 1740 - 10 x 2,160 - 17 x 2,880 - ரூபா 2,54,100

* *பயிலுநர் பொலிஸ் கான்ஸ்ரபிள் சாரதி பதவி.*- ரூபா 1,71,360 - 7 x 1740 - 10 x 2,160 - 17 x 2,880 - ரூபா 2,54,100

மேற்கூறப்பட்ட சம்பள அளவுத்திட்டத்துக்கு மேலதிகமாக கீழ்க்காணும் படிகள் மாதம் தோறும் வழங்கப்படும் :-

(அ) *விசேட கடினப்படி:*
- (1) போர் நடைபெறும் பிரதேசங்களில் கடமை பொருட்டு ரூபா 1,200;
- (2) போர் நடைபெறாத பிரதேசங்களில் கடமை பொருட்டு ரூபா 600.

(ஆ) *இணைந்த படிகள்:*

- (1) போர் நடைபெறும் பிரதேசங்களில் கடமை பொருட்டு ரூபா 10,500;
- (2) போர் நடைபெறாத பிரதேசங்களில் கடமை பொருட்டு ரூபா 3,500.

அ. இலவச பயண வசதி ;

ஆ. உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளி நாடுகளிலும் வைத்திய சிகிச்சை பொருட்டு) பண உதவிகள் வழங்கப்படும்;

இ. சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும்;

ஈ. விளையாட்டுத் திறனை வளர்ப்பதற்கு உதவிகள் வழங்கப்படும்;

உ. கடமைக்கான பிரயாணச் செலவுகள், துணிகரமான சேவை களுக்காகவும் அத்துடன் திறமையாக கடமைகளை நிறைவு செய்வதற்காகவும் வெகுமதியாகவும் பணம் வழங்கப்படும்.

**4.தேவையான அடிப்படைத் தகைமைகள்.-**

(அ) *வயதெல்லை :*

* *தகுதிகூர் பொலிஸ் கான்ஸ்ரபிள் பதவி :*

வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்பமுடிவுத் திகதியில் 18-28 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் சேவை செய்யும் உத்தியோகத்தர்களுக்கும், பாதுகாப்பு உத்தி யோகத்தர்களுக்கும் (SA) விண்ணப்பங்கள் பாரம் கொடுக்கும் கடைசித் திகதி அன்று 30 வயதிற்கு உட் பட்டவராக இருத்தல் வேண்டும்

* *தகுதிகூர் பெண் பொலிஸ் கான்ஸ்ரபிள் பதவி :*

வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்பமுடிவுத் திகதியில் 18-28 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

* *தகுதிகூர் பொலிஸ் கான்ஸ்ரபிள் சாரதி பதவி :*

வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவு திகதியில் 19- 28 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் சேவை செய்யும் உத்தியோகத்தர்களுக்கும், பாதுகாப்பு உத்தி யோகத்தர்களுக்கும் (SA) விண்ணப்பங்கள் பாரம் கொடுக்கும் கடைசித் திகதி அன்று 30 வயதிற்கு உட் பட்டவராக இருத்தல் வேண்டும்

(ஆ) *கல்வித் தகைமைகள்.-*

* *தகுதிகூர் பொலிஸ் கான்ஸ்ரபிள் பதவி :*

க.பொ. த. (சா.தர) பரீட்சையில் கணிதம், தாய்மொழி அடங்கலாக இரு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரு தடவைகளில் சித்தியெய்தியவர்கள் முதல் தடவையில் ஐந்து பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

* *தகுதிகூர் பொலிஸ் கான்ஸ்ரபிள் சாரதி பதவி:*

க.பொ.த. (சா.த) பரீட்சையில் கணிதம், தாய்மொழி அடங்கலாக இரு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரு தடவைகளில் சித்தியெய்தியவர்கள் முதல் தடவையில் ஐந்து பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு 1.**- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையை கணக்கில் எடுக்கும் போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க.பொ. த. (சா.தர) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 2.**- க.பொ.த.(சா.தர) பரீட்சையின் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்ப பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல் முறைப்பரீட்சையில் சித்தியடைந்திருந்த போதும் அப்பாடத்தில் சித்தியடையாததாக கருதப்படும்.

**குறிப்பு 3.**- விருப்பத்துக்குரிய தமிழ், ஆங்கிலம், சிங்கள பாடங்கள் க. பொ. த. (சா. தர) பாடத்திட்டத்துக்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்திபெறுதல் க.பொ.த. (சா.தர) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாக கருதப்படமாட்டாது.

(இ) *பௌதிக தகைமைகள் :*

* தகுதிகூர் பொலிஸ் கான்ஸ்ரபிள் பதவி :

- *உயரம் : 5 அடி 4 அங்.* (ஆகக் குறைந்தது)
- *மார்பு : 30 அங்.* ஆகக் குறைந்தது (மூச்சு விட்ட நிலையில்)

* தகுதிகூர் பெண் பொலிஸ் கான்ஸ்ரபிள் பதவி :

- *உயரம் : 5 அடி 2 அங்.* (ஆகக் குறைந்தது)

* தகுதிகூர் பொலிஸ் கான்ஸ்ரபிள் சாரதி பதவி :

- *உயரம் : 5 அடி 3 அங்.* (ஆகக் குறைந்தது)
- *மார்பு : 30 அங்.* ஆகக் குறைந்தது (மூச்சு விட்ட நிலையில்)

**குறிப்பு 1.**- சிறந்த விளையாட்டுத்திறமையுடைய தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமைகாட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ்

ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் உயரமும், மார்பளவும் குறைவாக இருப்பினும் அவர் பிற தேவைகளை பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் தற்றுணிபின் படி ஆட்சேர்க்கும் பொருட்டான தகைமையை அவர் பெறுவார்.

(ஈ) தொழில் தகைமைகள் :

(1) இலகு வாகனங்களை அல்லது கனரக வாகனங்களை ஓட்டும் திறமை இருப்பதற்கான சான்றிதழ் இருத்தல்.

(2) மேற்குறிப்பிட்ட சான்றிதழைப் பெற்ற பின் ஆகக் குறைந்தது ஒரு வருடத்திற்கு மோட்டார் வாகனம் செலுத்திய அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

- வாகனத்தை திறமையுடன் செலுத்துவதற்கு தேவைப்படும். உடல் அவயங்களின் இயக்கத்திற்கு தடையாக இருக்கும் ஏதாவதொரு அங்கவீன அல்லது பிற உடல் குறைபாடுகளை உடைய வேட்பாளர் சேவைக்கு பொருத்தமானவர் எனும் வைத்தியசாலை சான்றிதழ் பெற்றிருப்பினும் தகைமை நீக்கப்படுவர்.

- அடிப்படைத் தகைமைகளை கொண்ட விண்ணப்பதாரர் வாகனம் செலுத்துவது, பராமரிப்பு தொடர்பில் பரீட்சிக்கப்படுவர். அது போலவே வீதிகள் போக்குவரத்து சைகைகள் தொடர்பாக வேட்பாளர்கள் பெற்றுள்ள அறிவு ஒவ்வொரு வேட்பாளரும் வாகனம் செலுத்துவதற்கு திறமை பெற்றுள்ள வாகனங்களும் இயந்திர தொழில்நுட்பம் தொடர்பான அடிப்படை அறிவு ஆகியனவும் பரீட்சிக் கப்படும்.

(உ) பார்வை தொடர்பான தேவை.- ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 க்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/ 6 ஆகவும் மற்ற கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பின் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் தகைமை அற்றவராவர்.

(ஊ) பிற தகைமைகள்.- விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்துப் பெற்றவர்கள், விவாகமானவர்களாகக் கருதப்படுவர்.) ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கு இது ஏற்புடையதாகாது.

**5. ஆட்சேர்ப்பு முறை.**- தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் ஆரம்ப தகைமைகள் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். இதில் சித்தியடைபவர்கள் மாத்திரம் கீழ்வரும்உடற் பயிற்சிகளில் பங்கு பற்றலாம் அதாவது மனோவலிமை பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.

- பயிலுநர் பொலிஸ் கான்ஸ்ரபிள் பதவி

(1) மீற்றர் 1000 - 3 நிமிடங்கள் 44 விநாடிகள்

- பயிலுநர் பெண் பொலிஸ் கான்ஸ்ரபிள் பதவி

(2) மீற்றர் 1000 - 5 நிமிடங்கள் 14 விநாடிகள்

- பயிலுநர் பொலிஸ் கான்ஸ்ரபிள் சாரதி பதவி

(3) மீற்றர் 1000 - 3 நிமிடங்கள் 44 விநாடிகள்

- தகுதிகாண் பரீட்சையில் சித்திபெறும் ஆண்/பெண் விண்ணப்பதாரர்கள் மாத்திரம் இறுதி நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்படுவர். இறுதி நேர்முகப் பரீட்சையில் 40 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகள் பெறும் ஆண்/பெண் விண்ணப்பதாரர்கள் மாத்திரம் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். தகுதிகாண் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரர்கள் சாரதி தொழில்சார் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

* எழுத்து பரீட்சை.- (பொலிஸ் கான்ஸ்டபிள், பெண் பொலிஸ் கான்ஸ்ரபிள், பொலிஸ் கான்ஸ்ரபிள் சாரதி)

* எழுத்துப் பரீட்சை இரு வினாத்தாள்களை அடக்கி உள்ளது;
* 45 நிமிடங்களில் 500 சொற்களுக்கு குறையாமல் ஒரு விடயம் தொடர்பாக எழுதுதல்;
* பொது அறிவும் பொது நுட்பமும் - 01 மணித்தியாலம்.

**6. தொழில்சார் பரீட்சை - பொலிஸ் கான்ஸ்ரபிள் சாரதி (பதவி)**

**6.1** இலங்கை பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரின் பணிப்புரை யின் கீழ் பொலிஸ் சாரதி பாடசாலையின் உதவி பணிப்பாளரினால் தொழில்சார் பரீட்சை நடாத்தப்படும்.

6.2 தொழில்சார் பரீட்சைக்கு 100 புள்ளிகள் ஒதுக்கப்பட்டுள்ளது தொழில்சார் பரீட்சை பின்வருமாறு நடாத்தப்படும் :-

(அ) வாகனம் செலுத்தும் தகுதி - 50 புள்ளிகள் ;
(ஆ) வீதிச்சட்ட அறிவுரை - 25 புள்ளிகள் ;
(இ) வாகனப் பராமரிப்பு, சிறிய திருத்த வேலைகள் தொடர்பான அறிவு - 25 புள்ளிகள்.

**6.3** தொழில்சார் பரீட்சை.- வாகனம் செலுத்தும் தகுதிப்பரீட்சைக்கு ஒதுக்கப்பட்டுள்ள உச்ச எல்லையாகிய 50 புள்ளிகளில் ஆகக் குறைந்தது 25 புள்ளிகளும் வீதிச்சட்ட அறிவுரை புத்தகம் தொடர்பாக ஒதுக்கப்பட்டுள்ள உச்ச எல்லையாகிய 25 புள்ளிகளில் ஆகக்குறைந்தது 12.5 புள்ளிகளும் வாகனப்பராமரிப்பும் சிறிய திருத்த வேலைகள் தொடர்பான அறிவுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள உச்ச எல்லையாகிய 25 புள்ளிகளில் ஆகக் குறைந்தது 12.5 புள்ளிகளும் பெற்று முழுப் புள்ளிகளில் ஆகக் குறைந்தது 50 புள்ளிகளாவது பெறும் விண்ணப்பதாரிகள் தொழில்சார் பரீட்சையில் சித்தியடைந்த வர்களாகக் கருதப்படுவர்.

**7. வைத்திய பரீட்சை :**

* ஆகக்கூடிய புள்ளிகளையும் ஏனைய திறமைகளையுளும் உடைய விண்ணப்பதாரிகள் தமது நியமனத்திற்கு முன் வைத்திய பரீட்சைக்கு தோற்ற வேண்டும். பரீட்சையில் சித்தி பெறாதோர் நிராகரிக்கப்படுவர்.

**8. பின்னணி விசாரணை.**- (அ) விண்ணப்பதாரியின் நன் நடத்தை தொடர்பாக, அவர் தொடர்பாகவும் கிட்டிய உறவினர்களதும், நண்பர்களினதும் நடத்தை தொடர்பாகவும் விசாரணை மேற்கொள்ளப் படும். துர் நடத்தையுள்ள விண்ணப்பதாரிகள் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரி பொய் தகவல் கொடுப்பது அவரை ஆட் சேர்ப்பதற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின் பொய்யான தகவல் கொடுத்துள்ள விடயம் வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவர்.

*9. **அரச மொழித் தேர்ச்சிக் கொள்கையை அமுல்படுத்தல்***

- பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 2007.04.28 ஆந் திகதிய 07/2007 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்று நிருபத்தின் பிரகாரம் அரச சேவைக்கு/மாகாண அரச சேவைக்கு சேர்க்கப்பட்டவர்கள் தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச கரும மொழிகளிலும் 2007.07.01 ஆந் திகதியிலிருந்து 5 வருடத் திற்குள் தேர்ச்சி பெறல் வேண்டும்.

- 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்கு கீழே சேர்க்கப்படும் அலுவலர்கள், அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் மொழிப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

- நியமனத் தேதியில் இருந்து 5 வருடத்திற்குள் இரண்டாம் அரச கருமமொழியில் சித்தியடையாதவர்களாயின் சம்பள ஏற்றம் தேர்ச்சியடையும் வரை நிறுத்தி வைக்கப்படும்.

*10. **பதவிக்கமர்த்தல் நியதிகள்**.-* இப்பதவி நிரந்தரமானது ஓய்வூதியத்திற்குட்பட்டது. விதவைகள்/தபுதாரர், அநாதைககள் ஓய்வூதிய திட்டத்திற்கு சந்தாப்பணம் கொடுத்தல் வேண்டும்.

*11. **சேவை நிபந்தனைகள்**.-* (அ) நியமனம் 3 ஆண்டு காலத்துக்கு தகுதிகாண் அடிப்படையில் இருக்கும்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை வினைவுறும் முகமாக ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் ஆக்கப்படக் கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபனக் கோவையின் 1 ஆம், 2 ஆம் தொகுதிகளில் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகளுக்கும் நிதி ஒழுங்கு விதிகள், திணைக்களக் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்பட்டவராவர்.

(ஈ) (i) பதவியில் உறுதிப்படுத்துவதற்கு முன்பதாக விண்ணப்பதாரிகள் குறிப்பிடப்பட்டுள்ள திணைக்களப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். குறிப்பிடப்பட்டுள்ள திணைக்களப் பரீட்சையில் சித்தியடையாமலும் பொலிஸ் கடைமைகளுக்கு தகுதியில்லையெனவும் காணப்படும் விண்ணப்பதாரிகள் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு இடமுண்டு.

(ii) நியமனம் உறுதிப்படுத்துவதற்கு முன் பொலிஸ் கான்ஸ்ரபிள் சாரதி மேற் போந்த பந்தி (அ) (1) இற்கு மேலதிகமாக பொலிஸ் கல்லூரியினால் நடாத்தப்படும். பாரவண்டிகள் செலுத்துதல் தொடர்பான பரீட்சைகளிலும் சித்தியெய்துதல் வேண்டும்.

(உ) பொலிஸ்மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் தமது பதவியில் உறுதிப்படுத்தும் வரை திருமணம் செய்ய இயலாது. எனினும் 1973.02.28 ஆந் திகதிய 41 ஆம் இலக்க பொலிஸ் வர்த்தமானி பகுதி II பிரகாரமும் 2006.10.19 ஆந் திகதியும் 2007.08.09 (திருத்தப்பெற்றது) ஆந் திகதியினுடைய 1952/2006 என்ற இலக்க பொலிஸ்மா அதிபரின் சுற்று நிருபத்தின் பிரகாரம் பொலிஸ்மா அதிபரின் அங்கீகாரத்துடன் திருமணம் செய்ய முடியும்.

(ஊ) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருட கால தகுதிகாண் நிலையில் பொலிஸ் திணைக்களத்திலேயே பணியாற்ற வேண்டியதுடன் தகுதிகாண் சேவைக்காலம் முடிவடைவதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக்காகவும், சீருடை முதலியவற்றிற்காகவும் செய்த செலவினங்கள் பொருட்டு விதிக்கப்படும் பணத் தொகையை செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்த மொன்றில் கையொப்பமிடல் வேண்டும். அப்பணத் தொகை இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் கணிக் கப்பட்டு தீர்மானிக்கப்படும். பதவி விலகல்களை அங்கீகரிப்பது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் 1 ஆம் தொகுதி யின் 5 ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாய் இருத்தல் வேண்டும்.

(எ) பயிலுநர் பொலிஸ் கான்ஸ்ரபிள், பயிலுநர் பெண் பொலிஸ் கான்ஸ்ரபிள் பயிலுநர் பொலிஸ் கான்ஸ்ரபிள் சாரதி, பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் பொலிஸ் மா அதிபரின் 1693/2003 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி பொலிஸ் நன்னடத்தைக் கோவைக்கு அமைந்தொழுகுவதாக உறுதி/சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஏ) பயிலுநர் பொலிஸ் கான்ஸ்ரபிள், பயிலுநர் பெண் பொலிஸ் கான்ஸ்ரபிள் பயிலுநர் பொலிஸ் கான்ஸ்ரபிள் சாரதி, பொலிஸ் பயிற்சி கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் பொலிஸ் மா அதிபரின் 1804/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச சேவைக்கு அமைந்தொழுகுவதாக உறுதி/சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஒ) பயிலுநர் பொலிஸ் கான்ஸ்ரபிள் பயிலுனர் பெண் பொலிஸ் கான்ஸ்ரபிள், பயிலுனர் பொலிஸ் கான்ஸ்ரபிள் சாரதி பொலிஸ் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையவராவர்.

12. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) வில் வெளியிடப்பட்டுள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளுக்கு கவனம் ஈர்க்கப்படுகின்றது:-
(ஆ) 1990.03.10 ஆந் திகதிய 15/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின் படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

13. விண்ணப்பதாரர், தமது விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் ஆவணங்களின் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும். (மூல ஆவணங்களை சமர்ப்பித்தல் ஆகாது):-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) அண்மையில் பெறப்பட்ட குணச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது) ;
(இ) கல்வித் தகைமைகளை சான்றுபடுத்தும் சான்றிதழ்கள் ;
(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது பாடத்துக்கு புறம்பாக பெறப்பட்ட சான்றிதழ்கள் ;
(உ) சேவை அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள் (இருப்பின்);
(ஊ) தேசிய அடையாள அட்டையின் பிரதி.

14. (அ) ஏலவே அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்புதல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதழ்களும் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11''x 8'' அளவுத் தாளிலான விண்ணப் பத்தை தமது சொந்த கையெழுத்தில் பூரணப்படுத்தி கேட்கப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள

முகவரிக்கு அனுப்ப வேண்டும். எக்காரணம் கொண்டும் திணைக் களத்தின் எந்த உத்தியோகத்தர்களிடமும் விண்ணப்பங்களை நேரடியாக கையளித்தலாகாது.

15. இவ்வறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பாக விண்ணப்பகாரர்களுக்கு அறிவிக்கப்பட மாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவு களோ வழங்கப்பட மாட்டாது.

பொலிஸ் மா அதிபர்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பொலிஸ் திணைக்களம்**

பொலிஸ் கான்ஸ்ரபிள், பெண் பொலிஸ் கான்ஸ்ரபிள், பொலிஸ் கான்ஸ்ரபிள் சாரதி பதவிகள்

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழ்களில் உள்ளபடியும் இருத்தல் வேண்டும்) :-----.

(ஆ) முதல் எழுத்துக்களுடன் பெயர் :-----.

(இ) விண்ணப்பதாரியின் பதவி :-----.

2. தேசிய அடையாள அட்டை இல. :-----.
(பிரதியை இணைக்கவும்)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.

பிறந்த இடத்துக்குரிய பொலிஸ் நிலையம் (மாகாணம்) :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.
(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
(இ) நிரந்தர முகவரி :-----.
(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையமும், தேர்தல் மாவட்டமும் :-----.

6. (அ) தேசிய இனம் :-----.

(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரசையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழ் பிரதியை இணைக்கவும்) :-----

(இ) வம்சாவளி மூலம் இலங்கைப் பிரசையானால் பின்வருபவர்கள் பிறந்த இடத்தைக் குறிப்பிடவும் :-

(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரரின் தந்தை வழிப் பாட்டன் :-----.
(4) விண்ணப்பதாரரின் தந்தை வழி முப்பாட்டன் :-----.

7. வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்று விண்ணப்பதாரரின் வயது :-
(விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)
வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

8. உயரம் : அடி :-----, அங்குலம் :-----.
மார்பு :---- , அங்குலம்

9. கல்வித் தகைமைகள் :- (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. வேறு ஏதேனும் விசேட தகுதிகள் /தகைமைகள் உண்டா ? :-----.

11. திருமணம் ஆனவரா? திருமணம் ஆகாதவரா ? :-----.

12. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.

(ஆ) நீங்கள் இலங்கை படைத்தாங்கு சேவையின் அங்கத்தவரா ? :-----.

13. வேறு ஏதேனும் விசேட திறமைகள் உண்டா ? :-----.

14. உங்களைப் பற்றிய தகவல்களைக் கொடுக்கக்கூடிய உறவினர் அல்லாத இரு நபர்களின் பெயர்களையும் முகவரிகளையும் தருக. :-----.

(அ) :-----.
(ஆ) :-----.

15. (அ) இலங்கைப் பொலிஸ் சேவையின் ஏதாவது பதவி ஒன்றுக்கு நீங்கள் இதற்கு முன்பு விண்ணப்பித்ததுண்டா? (அவ்வாறாயின்) இது தொடர்பான விபரங்களைத் தருக. :-----.

(ஆ) இதற்கு முன்பு நீங்கள் இலங்கைப் பொலிஸில் அல்லது இலங்கை உப சேவைப் பொலிஸில் சேவை செய்துள்ளீரா? அவ்வாறாயின் அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைத் தருக? :-----.

16. (அ) தற்போதைய படைத்தாங்கு சேவையில் இருந்திருந்தால் அப்படைத்தாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும் :----.

(ஆ) படைதாங்கு சேவையில் இருந்திருந்தால் அதிலிருந்து விலகிய போது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும்.

17. (அ) படைத்தாங்கு சேவையின் தொண்டர் அணியில் இருந்துள் ளீரா? அல்லது இருக்கின்றீரா? அவ்வாறு இருந்திருந்தால் படைதாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் எப்போதாவது அரசாங்கத்தின் கீழ் சேவையாற்றி யுள்ளீர்களா? அவ்வாறாயின் நீங்கள் சேவையாற்றிய காலப்பகுதி திணைக்களம், பதவி ஆகியவற்றின் விபரங்களைத் தருக.:-----.

18. நீங்கள் ஏதாவது ஒரு குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டீரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டீரா அல்லது

தண்டனை கொடுக்கப்பட்டுள்ளீரா?அவ்வாறாயின் விபரங்களைத் தருக :-----.

19. உங்கள் உறவினர் எவரேனும் தவறு சம்பந்தப்பட்டு அல்லது அது தொடர்பான அழைப்பாணை கொடுக்கப்பட்டு அல்லது குற்றம் சுமத்தப்பட்டு அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ள னரா? அவ்வாறாயின் விபரம் தருக. :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யானவையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் திணைக்களச் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பினும் எந்தச் சந்தர்ப்பத்திலும் உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

.................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

12-751

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## VI ஆம் தர சமுர்த்தி முகாமையாளர்களை V ஆம் தரத்துக்குப் பதவி உயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சை - 2008

இலங்கை சமுர்த்தி அதிகாரசபையில் 6 வருட சேவைக் காலத்தைக் கொண்டுள்ள VI ஆம் தர சமுர்த்தி முகாமையாளர்களை V ஆம் தரத்துக்குப் பதவி உயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2009, மாச்சு மாதத்தில் கொழும்பில் நடாத்தப்படவுள்ளது.

2. இப்பரீட்சை 03 வினாத்தாள்களைக் கொண்டதாகும்.

**2.1 பொது விவேகமும் உளச்சார்பும்.**- பரீட்சார்த்திகள் ஊகித்துக் கொள்ளும் ஆற்றல், தர்க்கரீதியான புத்தி மற்றும் உடனடியாகச் சிந்திக்கக் கூடிய ஆற்றல் பற்றிக் கண்டறியும் ஒரு வினாத்தாளாகும்.

* புள்ளிகள் 100
* நேரம் 1 1/2 மணித்தியாலம்
* சித்திபெறுவதற்காகப் பெறப்பட வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள் 40% ஆகும்.

2.2 **சமுர்த்தி விடயம் பற்றிய அறிவு.**-இதற்குரிய வினாத்தாள் சில பகுதிகளாக (அ, ஆ, இ, ஈ மற்றும் உ ஆகிய) நடாத்தப்பட வேண்டியுள்ளதுடன் வினாத்தாளின் "அ" பகுதி சகல சமுர்த்தி முகாமையாளரும் பொதுவாக பதில் அளிக்கக்கூடிய சமுர்த்தி இயக்கம் மற்றும் அதனோடு தொடர்புடைய பொது விடயங்கள் சார்பாக தயாரிக்கப்பட்டதொன்றாக இருத்தல் வேண்டும்.

வினாத்தாளின் ஏனைய பகுதிகளைத் தெரிவு செய்து பதிலளிக்கக்கூடிய விதத்திலானதொன்றாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அந்த ஒவ்வொரு பகுதியும் வங்கிச் சங்க முகாமையாளர்கள், மகா சங்க முகாமையாளர்கள், கருத்திட்ட முகாமையாளர்கள், தலைமையக முகாமையாளர்கள், மாவட்ட செயலக முகாமையாளர்கள் மற்றும் தலைமை அலுவலக முகாமையாளர் ஆகியோருக்கு அவர்களால் நிறைவேற்றப்படும் கடமைகள் சார்ந்ததாக தயாரிக்கப்பட்டதொன்றாக இருத்தல் வேண்டும்.

* புள்ளிகள் 100
* நேரம் 1 1/2 மணித்தியாலம்
* சித்திபெறுவதற்காகப் பெறப்பட வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள் 40% ஆகும்.

2.3 **நிதிப் பிரமாணங்கள், தாபன விதிக்கோவை பற்றிய அறிவு மற்றும் பொது அறிவு வினாத்தாள்:-**



இங்கு தாபன விதிக்கோவை மற்றும் நிதிப்பிரமாணங்களில் தெரிவு செய்யப்பட்ட அத்தியாயமொன்று மற்றும் முகாமையாளர்களின் பொது அறிவை அளவிடும் வினாத்தாளொன்று:

* புள்ளிகள் 100
* நேரம் 1 1/2 மணித்தியாலம்
* சித்திபெறுவதற்காகப் பெறப்பட வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள் 40% ஆகும்.

3. இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மாத்திரம் நடைபெறும். இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மாதிரி விண்ணப்பப் படிவமொன்று இந்த அறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இந்த மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பப்படிவங்களை தயாரித்துக்கொள்ளல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் A4 அளவிலான தாள்களில் மட்டுமே தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே விண்ணப்பப்படிவங்கள் நிரப்பப்படல் வேண்டும். விண்ணப்பிக்கும் மொழி பின்னர் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது. விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு இலக்கம் 1.0 தொடக்கம் 4.0 வரை முதலாம் பக்கத்திலும் எஞ்சியவை இரண்டாம் பக்கத்திலும் அமையும் விதத்தில் தயாரிக்கப்பட வேண்டும் என்பதுடன் அதற்குரிய தகவல்கள் தங்களது கையெழுத்தினாலேயே தெளிவாக நிரப்பப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு இயல்பாக அமையாத விண்ணப்பப்படிவங்களும் பூரணத்துவம் இல்லாமல் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப் படிவங்களும் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உரிய விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதியொன்று தங்களிடம் வைத்துக்கொள்ளல் பயனுள்ளதாக இருக்கும். விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்கும் போது அங்கு தலைப்பு குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்களப் பிரதிகளில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் பிரதிகளில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும்.

4. விண்ணப்பப்படிவம் தங்களது நிறுவனத் தலைவரின் ஊடாக (மாவட்ட செயலாளர்/ பிரதேச செயலாளர்) பிரிவுகளில் இணைக்கப்பட்டிருப்பின் அந்த மாவட்ட/பிரதேச செயலாளர்கள் ஊடாக 2009, சனவரி மாதம் 26 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், அமைப்புகள் மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிப் பிரிவு, பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தினை அனுப்பும் கடிதஉறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்குப் பின்னர்

கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தமது விண்ணப்பப் படிவத்தை அரசகரும மொழியில் அல்லது தாம் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மொழியின் பிரகாரம் தயாரித்துக்கொள்ள முடியும்.

5. விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சைக்குக் குறைந்தபட்சம் ஏழு நாட்களுக்கு முன்னர் தமது அனுமதி பத்திரம் கிடைக்கப்பெறாதவிடத்து அவரினால் அது பற்றி தாமதிக்காமல் கீழ்க்காணும் தகவல்களுடன், "பத்தரமுல்லை, பெலவத்தை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்" இற்கு அறிவிக்கப்படல் வேண்டும். (தந்திகள் அனுப்ப வேண்டிய முகவரி : "பரீட்சைகள்" பத்தரமுல்லை.)

(1) பரீட்சையின் பெயர் ;
(2) விண்ணப்பதாரியின் முழுப்பெயர் ;
(3) விண்ணப்பதாரியின் முகவரி ;
(4) விண்ணப்பப்படிவம் தபாலில் இடப்பட்ட தபால் அலுவலம் ;
(5) பதிவு செய்யப்பட்ட இலக்கமும் திகதியும்.

விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன் அது பற்றிக் குறிப்பிடப்பட்ட பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட 2 அல்லது 3 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது பற்றி இலங்கை பரீட்சைகள் திணைக்களத்துக்கு அறிவித்தல் வேண்டும். உங்களிடம் வைத்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பப்படிவத்தினதும் பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டினதும் உறுதி செய்யப்பட்ட போட்டோப் பிரதிகளும் பதிவுசெய்த பற்றுச்சீட்டும் கொழும்பிற்கு வெளியிடங்களில் எனின் அனுமதி அட்டைஅனுப்பி வைப்பதற்கான "பெக்ஸ்" இலக்கமொன்றும் குறிப்பிடப்பட்ட கோரிக்கைக் கடிதத்தையும் வைத்து இலங்கை பரீட்சைகள் திணைக்களத்துக்கு அறிவிப்பது மிகவும் பயனுள்ளதாகும்.

6. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் சகல விடயங்களுக்கும் பரீட்சை மண்டப அதிபதி திருப்திப்படக்கூடிய வகையில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்கென பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(1) ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் ஆளடையாள அட்டை ;

(2) செல்லுபடியாகும் வெளிநாட்டுக் கடவுச்சீட்டு (பாஸ்போட் அனுமதிப்பத்திரம்).

7. பரீட்சை நடாத்துதல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்படும் சட்ட விதிகளுக்கு பரீட்சைக்கான விண்ணப்பதாரிகள் உட்படுவர். அந்த சட்ட விதிகள் மீறப்பட்டால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவன்/அவள் உள்ளாக வேண்டிவரும்.

8. இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பித்துள்ள சகலருக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதிப்பத்திரம் அனுப்பப்படும் என்பதுடன் அவர்களுக்குத் தங்களது அலுவலகத் தலைவரினால் உத்தியோக விடுமுறை வழங்கப்படுதல் வேண்டும்.

9. இந்த விதிமுறைகளுக்குள் அடங்காத ஏதேனும் விடயமொன்றிருப்பின், இலங்கை சமுர்த்தி அதிகாரசபை பணிப்பாளர் நாயகத்தின் விருப்பின் பிரகாரம் அது பற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆர். பீ. பி. திலகசிரி,
பணிப்பாளர் நாயகம்.

இலங்கை சமுர்த்தி அதிகாரசபை,
4 ஆம் மாடி, செத்சிரிபாய,
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**VI ஆம் தர சமுர்த்தி முகாமையாளர்களை V ஆம் தரத்துக்குத் பதவி உயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சை - 2008**

Competitive Examination for Promotion of Grade VI Samurdhi Managers to Grade V - 2008

[ ]
(அலுவலக உபயோகத்துக்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் : [ ]
(சிங்களம் - 2, தமிழ் - 3)

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

1. பெயர் :-
 1.1 முதலெழுத்துக்கள் இறுதியாக வரும் விதத்தில் முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :--. (உதா.: NIMAL, JMD)

 1.2 முழுப்பெயர் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) : -----.

 1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :------.

2. அலுவலக முகவரி (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :-----. (அனுமதிப்பத்திரம் இந்த முகவரிக்கு அனுப்பி வைக்கப் படும்.):----.

 2.1நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :-----.

3. (பெண்/ஆண்) :

 3.1 பால் :
 (பெண் - 1, ஆண் - 0)
 [ ]
 (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

 3.2 விவாகமானவரா/விவாகமாகாதவரா :
 (விவாகமாகாதவர் - 1, விவாகமானவர் - 2)
 [ ]
 (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

 3.3 பிறந்த திகதி :

 ஆண்டு : [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]

 3.4 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தினத்தன்று வயது :

 வருடங்கள் : [ | ] மாதங்கள் : [ | ] நாட்கள் : [ | ]

4. தேசிய ஆளடையாள அட்டை இல.: [ | | | | | | | | | ]

5. பதவியும் தரமும் :-----.

மேலே காண்பிக்கப்பட்ட விடயங்கள் சரியானவை எனவும் விண்ணப்பித்துள்ள மொழியில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை உள்ளதெனவும் அறியத்தருகின்றேன். மேலும் பரீட்சை நடாத்துதல் சம்பந்தமாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டவிதிகளுக்கு நான் இணங்குகின்றேன் எனவும் அறியத்தருகின்றேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,

சமர்ப்பிக்கின்றேன்.

மேலே விபரம் காண்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரிக்கு இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமைகள் உள்ளதெனவும் அவரினால் தரப்பட்டுள்ள மொழியில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவருக்கு தகைமைகள் உண்டு என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
பதவிப் பெயரும் உத்தியோக முத்திரையும்.-----,

திகதி :-----.

12-614

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.